Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 08  திருவள்ளுவர் ஆண்டு 2023  மார்கழி 04  (19-12-1992)  சனிக்கிழமை  ஓசை 305

## கிழக்கில் 5 நாட்கள் மழை குளங்கள் உடைப்பு

திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளப் பெருக்குக் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடுவாசல்களை இழந்திருக்கிறார்கள் அநுராதபுரம் மாவட்டத்திலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. வடமுனைக் குளம் உடைப்பெடுத்துள்ளது. அண்மையில் கிழக்கிலங்கைப் பகுதியில் பெய்து வரும் பெரும் மழை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் வடமுனைக்குளம் உடைப்பெடுத்திருப்பதாகவும், இதனால் கிரான், சித்தாண்டி, வாழைச்சேனைப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. மேலும் மட்டக்களப்பு, அம்பாறை பொலனறுவை மாவட் [4 ஆம் பக்கம் பார்க்க]

### (இடைக்காடு, தொண்டமானாறு பகுதியில்)

# இராணுவம் புலிகள் உக்கிர சண்டை

# இழப்புகளுடன் படைகள் பின்வாங்கின

## பல மணிநேரம் அகோர எறிகணை வீச்சு

[யாழ்ப்பாணம்]

பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியிலிருந்து இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது. நேற்றுக் காலை பலத்த எறிகணை வீச்சு நடத்தியவாறு வெளியேறிய இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் இரு இடங்களில் வைத்து வழிமறித்துத் தாக்குதல் நடத்தினர். பல மணி நேரம் இடம்பெற்ற இம் மோதலின் பின் தமது முயற்சியைக் கைவிட்ட இராணுவத்தினர் இழப்புக்களுடன் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் பலாலி இராணுவ முகாமின் கிழக்கு ஓரமாக அமைந்திருக்கும் தொண்டமானாறு கடற்கரைவீதியாலும், இடைக்காட்டு வீதயாலும தொண்டமானாறு. அச்சுவேலி பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் முன்னேற முறபட்டனர். இவர்களுக்கு துணையாக உலங்குவானூர்தி ஒன்றும் தாக்குதலில ஈடுபட்டிருந்தது.

பலத்த எறிகணைவீச்சை நடத்தியவாறு வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது இடைக்காட்டுச்சந்தி, தொண்டமானாற்றுச் சந்தி ஆகிய இடங்களில் வைத்து விடுதலைப் புலிகள் எதிர்த்த எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து தமது முயற்சிகளைக் கைவிட்ட இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுடன் பழைய நிலைகளுக்குத் திரும்பினர்.

இம்மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டதாயினும், இழப்புகளின் சரியான எண்ணிக்கை விபரம் தெரியவரவில்லை.

இதேவேளை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் இம்மோதலில் வீரச்சாவடைந்தார்.

## எறிகணை வீச்சுக்கு மூவர்பலி 16க்கு மேற்பட்டோர் காயம்

(அச்சுவேலி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலி பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தொடர்ச்சியான எறிகணை தாக்குதலாலும், கிபிர் தாக்கு...

நேற்றுக் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இராணுவத்தினரால் நூறுக்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன இவை தோப்பு, பத்தமேனி, வளலாய், வல்லை, இடைக்காடு, கதிரிப்பாய், அச்சுவேலி...

அரியரட்ணம் அன்னம்மா (வயது 55) செபமாலை சிசிலியா (வயது 60), பாக்கியம் (வயது 54) ஆகியோர் ஸ்தலத்திலே பலியாகினர்.

சி தில்லைநாதன் (14) தோப்பு அபிராமி (14) தோப்பு. ஆ.சிவாஜினி (19) இடைக்காடு...

## குடாகச்ச கொடியில் புலிகள் தாக்குதல்

### கோப்ரல் பலி; இருவர் காயம்

(கொழும்பு)

வவுனியா குடாகச்ச கொடி இராணுவ முகாம் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயன்று காலை நடாத்திய தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஒருவர் பலியாகியதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொட்டும் மழையின் மத்தியிலும் இத்திடீர் தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இத்தாக்குதலில் பலியானவர் இராணுவ கோப்ரல் ஏக்கநாயக்கா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளாலி தாக்குதல் ஓட்டி மீண்டு வந்தார்

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த பயணிகள் படகு ஒன்றின் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலில் உயிரிழந்ததாக கூறப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த...

...யிருப்பில் வசித்து வரும் மேற்படி இளைஞர் சம்பவ தினம் சில பயணிகளுடன் தாம் புறப்பட்டதாகவும் நடுக் கடலில் கடற்படையின் தாக்குதலுக்கு தமது படகு இலக்காகியதை அடுத்து தான் கடலில் குதித்து பல மணிநேர...

## மீட்புநிதி சேகரிப்பு நேர மாற்றம்

தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது: நாளை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிற்பகல் 1.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.15 மணிவரை தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் மீட்புநிதி சேகரிப்பு இடம் பெறும்.

நாளை மறுதினம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிப்பு இடம் பெறும்.

இன்று வடமராட்சி பகுதியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் முன்னர் குறிப்பிட்ட நேரங்களில் மீட்புநிதி...

கள் மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாயன்று காலை நடாத்திய தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஒருவர் பலியாகியதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நடாத்தப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இத்தாக்குதலில் பலியானவர் இராணுவ கோப்ரல் ஏக்கநாயக்கா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இளாலி தாக்குதல் ஓட்டி மீண்டு வந்தார்

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஆலங்கேணியில் இருந்து இளாலி நோக்கி வந்த பயணிகள் படகு ஒன்றின் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலில் உயிரிழந்ததாக கூறப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த அம்பிரட் தம்பியப்பா (வயது 26) என்பவர் நேற்று முன்தினம் வீடு திரும்பியுள்ளார். இடம் பெயர்ந்து கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசித்து வரும் மேற்படி இளைஞர் சம்பவ தினம் சில பயணிகளுடன் தாம் புறப்பட்டதாகவும் நடுக் கடலில் கடற்படையின் தாக்குதலுக்கு தமது படகு இலக்காகியதை அடுத்து தான் கடலில் குதித்து பல மணிநேர ஜீவமரண போராட்டம் நடாத்தி கரை சேர்ந்ததாகவும் ஏனைய பயணிகளுக்கு என்ன நடந்தது என்பதை தான் அறியவில்லை எனவும் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. (22)

## மட்டக்களப்பில்

# மூன்று தமிழ் இளைஞர் படையினரால் கொலை

(வாழைச்சேனை)

மட்டக்களப்பு வீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று தமிழ் இளைஞர்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு வீதியிலுள்ள கோரகல்லிமடு என்ற இடத்தில் வைத்தே இம்மூன்று இளைஞர்களும் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் ரமணன், சின்னவன், கணேசமூர்த்தி என அடையாளம் காணப்பட்டதாகவும் இவர்களது சடலங்களை இராணுவத்தினர் கும்புறு மூலை இராணுவ முகாமுக்கு இழுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

—அவுஸ்திரேலிய தூதுவர்

"சகல இன மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வின் அடிப்படையில் அமைந்த ஒரு அமைதித் தீர்வே இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமாகும். இன்றைய நேரத்தில் அவசரமாகத் தேவைப்படுவதும் அதுவே" என அவுஸ்திரேலிய தூதுவர் ஹவர்ட் டெப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ரூபவாகினியா? பிரேமவாகினியா?

(கொழும்பு)

ரூபவாகினியை தயவு செய்து பிரேமவாகினியாக மாற்றிவிடாதீர் என்று பிரேமதாசாவிடம் தான் நேரில் கேட்டுக் கொண்டதாக கேகாலை மாவட்ட ஐக்கிய சோசலிச முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரான அத்தாவுட செனவிரத்தின பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

சபாநாயகரின் இல்லத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்ட போது தகவற்றுறை அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்காவுடன் சென்று பிரேமதாசாவைச் சந்தித்த போது இதனைத் தெரிவித்ததாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் பலாலி இராணுவ முகாமின் கிழக்கு ஓரமாக அமைந்திருக்கும் தொண்டமானாறு கடற்கரைவீதியாலும், இடைக்காட்டு வீதயாலும தொண்டமானாறு. அச்சுவேலி பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் முன்னேற முறபட்டனர். இவர்களுக்கு துணையாக உலங்குவானூர்தி ஒன்றும் தாக்குதலில ஈடுபட்டிருந்தது.

பலத்த எறிகணைவீச்சை நடத்தியவாறு வெளியேறி வந்த இராணுவத்தினர் மீது இடைக்காட்டுச்சந்தி, தொண்டமானாற்றுச்சந்தி ஆகிய இடங்களில் வைத்து விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். இம்மோதல் சுமார் நான்கு மணித்தியாலங்கள்வரை நீடித்தது. புலிகள் தொடுத்த பலத்த எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து தமது முயற்சிகளைக் கைவிட்ட இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட இழப்புகளுடன் பழைய நிலைகளுக்குத் திரும்பினர்.

இம்மோதலில் இராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டதாயினும், இழப்புகளின் சரியான எண்ணிக்கை விபரம் தெரியவரவில்லை.

இதேவேளை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் இம்மோதலில் வீரச்சாவடைந்தார்.

# எறிகணை வீச்சுக்கு மூவர்பலி 16க்கு மேற்பட்டோர் காயம்

(அச்சுவேலி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து அச்சுவேலி பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தொடர்ச்சியான எறிகணை தாக்குதலாலும், கலிபர் தாக்குதலாலும் மூவர் கொல்லப்பட்டதுடன் பதினாறுக்கு மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுக் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இராணுவத்தினரால் நூற்றுக்கு மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டன இவை தோப்பு, பத்தமேனி, வளலாய், வல்லை, இடைக்காடு, கதிரிப்பாய், அச்சுவேலி பகுதிகளில் விழுந்து வெடித்தன.

தோப்பு பகுதியில் விழுந்து வெடித்த எறிகணைகளினால் அரியரட்ணம் அன்னம்மா (வயது 55) செபமாலை சிசிலியா (வயது 60), பாக்கியம் (வயது 54) ஆகியோர் ஸ்தலத்திலே பலியாகினர்.

சி. தில்லைநாதன் (14) தோப்பு அபிராமி (14) தோப்பு. ஆ. சிவாஜினி (19) இடைக்காடு ஆ. வரதலச்சுமி (20) இடைக்காடு, ஆச்சிப்பிள்ளை (80) கதிரிப்பாய், விமலா (25) தோப்பு, லவிதா (20) தோப்பு, ஆ. யோகராணி (22) தோப்பு. சுமன் (5) தோப்பு, செல்லத்துரை கௌரி [23] தோப்பு. மஞ்சுவிஜயரட்ணம் [10] தோப்பு. வ. துரைசிங்கம் (45) அச்சுவேலி, ஆறுமுகம் (66) அச்சுவேலி, இராசையா (68) அச்சுவேலி உதயச்செல்வன் [20] ஆவரங்கால் கிருஷ்ணன் (86) அச்சுவேலி ஆகியோர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளையில் துரைசிங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வல்லைப்பாலம் பலத்த சேதம்; கோயில்கள் மீதும் தாக்கு

## பெருமளவு குடியிருப்புக்கள் நாசம்

(அச்சுவேலி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து பரவலாக மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களினால் ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் வல்லைப்பாலம் என்பனவும் 30 ற்கு மேற்பட்ட வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக்காலை 7.30 மணி முதல் ஏழு மணிநேரம் தொடர்ச்சியாக ஏவப்பட்ட நூற்றுக்குமேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அச்சுவேலிப் பகுதியே அதிர்ந்தது.

### வல்லைப் பாலம் சேதம்-

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வல்லைப் பாலத்தைக் குறியாகக் கொண்டு மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் வல்லைப் பாலம் பலத்த சேதமடைந்தது. பாலத்தின் இருமருங்கிலும் 18 ற்கு மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இப்பாலம் சேதமடைந்ததால் இதனூடான போக்குவரத்து தடைப்படக் கூடியநிலை உருவாகியுள்ளது.

### ஆலயங்கள் சேதம்

சில எறிகணைகள் வல்லைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் முனியப்பர் ஆலயம், தீர்த்தப்பிள்ளையார் கோயில் ஆகியன பலத்த சேதமடைந்தன. பத்தமேனிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளினால் புனித சூசையப்பர் தேவாலயமும் பலத்த சேதமடைந்தது.

### பாடசாலை சேதம்

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் அருகில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 3000க்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்வு

[அச்சுவேலி]

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய திடீர் எறிகணைத் தாக்குதல்களினால் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வெளியேறி ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

### மக்கள் வெளியேற்றம்

நேற்றுக் காலை முதல் ஏழு மணி நேரம் நடாத்திய எறிகணைத்தாக்குதல்களினால் அச்சுவேலி, பத்தமேனி, கெருடாவில், சின்னக்கடற்கரை, காட்டுப்புலம், தொண்டமானாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புகழுடல் மக்கள் அஞ்சலிக்கு

பலாலி கிழக்குப் பகுதியின் வளலாய்ப் பகுதியிலிருந்து பத்தைமேனி கதிரிப்பாய் பகுதியின் ஊடாக முன்னேற முயன்ற இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தீவிர ஆதரவாளர் சின்னத்தம்பி, சர்வானந்தம்பவானந்தராசா வளலாய் அச்சுவேலி, என்பவரின் புகழுடம்பு வசிப்பிடமான புத்தூர் கிழக்கில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அணியணியாகப் படையினர் என்னை கடந்து சென்றனர்

## தப்பிவந்த வயோதிபர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

"நான் கதிரிப்பாய் வரணம் பகுதியிலிருக்கும் எனது தோட்டத்திற்குள் பயிர்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன் திடீரென துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. திரும்பிப் பார்த்த போது கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இராணுவத்தினர் அணி அணியாக வந்து கொண்டிருந்தனர். உடனே நான் விழுந்து குப்புறப் படுத்துக்கொண்டேன்."

இவ்வாறு நேற்று இராணுவம் முன்னேறிய பகுதியில் சிக்கி தப்பிவந்த க. வேலுப்பிள்ளை என்னும் வயோதிபர் தனது அனுபவத்தை களத்துக்குச் சென்ற எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நான் படுத்திருந்த இடத்திற்கு அருகாக பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் நடந்து சென்று கொண்டிருந்தனர். பாரிய இராணுவ வண்டிகள், கவச வாகனங்கள், பீரங்கி வண்டிகள் என்பனவும் சென்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

லும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.15 மணிவரை தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் மீட்புநிதி சேகரிப்பு இடம் பெறும்.

நாளை மறுதினம் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை மங்கயற்கரசி மகாவித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிப்பு இடம் பெறும்.

இன்று வடமராட்சி பகுதியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகாவித்தியாலயம், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் முன்னர் குறிப்பிட்ட நேரங்களில் மீட்புநிதி சேகரிப்பு இடம் பெறும்.

# வீரச்சாவு



கப்டன் மணிவாளன் (சந்திரன்)

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் மணிவாளன்/சந்திரன் (மார்க்கண்டு சிறிஸ்கந்தராசா தங்கபுரம், வவுனியா) என்னும் விடுதலைப்புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### தீவிர ஆதரவாளர் பவானந்தராசா

நேற்று தொண்டமானாறு, அச்சுவேலி பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் தீவிர ஆதரவாளர் சர்வானந்தம் பவானந்தராசா (வளலாய் அச்சுவேலி) என்பவர் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வரி விளம்பரம்

### கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் தெரிவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

### பற்சிகிச்சை நிலையம்

எஸ். பி. சாமி அன் கோ, கட்டிடம் (யாழ் பஸ் நிலையம் அருகில்) மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம். பா. நே.: தினசரி: 12 ந. ப 2 பி. ப. (3236)

### எம். ஜி ஆர். திருமண சேவை

வெளிநாடுகளில் பிரபல தொழில் புரியும் ஆண்களுக்கு பொருத்தமான மணமகள்கள் தேவை இலங்கை, சிங்கப்பூர் திருமணம். வே. புண்ணியமூர்த்தி, புத்தூர் சந்தி, மீசாலை. (3367)

### கடிகாரமா? றேடியோவா

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)


### விற்பனைக்கு

இறைச்சிக்கோழிவிற்பனைக் குண்டு (புறோய்லர்) தொடர்புகொள்ளவேண்டியமுகவரி. பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்துமிடம்) திக்கம் வடிசாலைக்கு முன்பு. திக்கம். (3409)

### தேவை

பாவிக்கப்பட்ட அல்லது புதிதான ரியூப் லைற்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்தும் இடம்), திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம். (3408)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



விரஜனனம் 30 08-1964

வீரச்சாவு 19-12-1990

### கப்டன் சுந்தரி

[உதயலட்சுமி உருத்திராபதி]

சுந்தரத் திலகமென அவதரித்தாய் உதயலட்சுமியே
எங்கள் சொந்த மனங்கள் மகிழ்ச்சிபெற
சூதாட்டம் மிக்க ஈழமக்கள் வாழ்வில் சுதந்திரம் வேண்டுமென்று
அந்தரத்தில் வாழும் மக்கள் அரசியல் அவலம் தீர்க்க வென்று
அர்த்தமுள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் துணைச் செயலாளரானாய்
கப்டன் சுந்தரியானாய் காட்சி பெறு போராட்டக் கூட்டங்களில்
கனவேகமான உன் பேச்சைக்கேட்டு வீரப்பெண்களும் சேர்ந்தனர் புலிப்படையில்
வெப்பமும் வியர்வையும் மழையும் குளிரும் உன்னை விரட்டவில்லை
வேதனை மிகுந்தஉன் சோதரர் வீரச்சாவு கண்டும் கலங்கினாயில்லை
வீரநெஞ்சமும் வீறுகொண்ட பார்வையும் கொண்டு
வீர விளையாட்டுகளிலும் பங்கு கொள்ள முடிவு செய்தாய்
நேரடி மோதலில் சிறிலங்காப் படையுடன் கட்டுவனில் மோதினாய்
நேயத்துடனிருந்த மக்கள் யாவரையும் விட்டு வீர சொர்க்கம் அடைந்தாயே

பெற்றோர்
சகோதர சகோதரிகள்,
வல்வை (3791) மைத்துனர்கள், பெறாமக்கள்

## 45-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 01 - 10 - 1972



உதிர்வு: 05 - 11 - 1992

### லெப்.பார்த்தீபன் (விநாயகம்)

[ஐயாத்துரை பிரபாகரன்]

I செஞ்சோலைக் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான

## பெண் சேவையாளர் தேவை

நிபந்தனைகள்

1. குறைந்தது 21 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. முழுநேரமாகத் தங்கி வேலையாற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
3. குறைந்தது க. பொ. த. [சாதாரணம்] சித்திபெற்றிருக்க வேண்டும்.
4. தாதிப் பயிற்சி பெற்றிருத்தல் சிறப்புத் தகுதியாகக் கணிக்கப்படும்.

II செஞ்சோலை கைக்குழந்தைகளைப் பராமரிப்பதற்கான

## தாதிகள் தேவை

1. ஓரளவு வயது முதிர்ந்த (குறைந்தது 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்)
2. மேலதிக விபரங்கள் நேரில் பேசிக் கொள்ளப்படும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்

யாழ் மாவட்ட மகளிர் முன்னணி அலுவலகம் முத்துத்தம்பி ஆரம்பபாடசாலைக்கு அருகாமையில் ஆடியபாதம் வீதி

திகதி: 24-12-92 காலம்: காலை 9 மணி

உங்கள்

1) சான்றிதழ்கள் 2) அத்தாட்சிப்பத்திரங்கள்
3) பிறப்பத்தாட்சிப்பத்திரத்துடன் நேரில் சமுகமளிக்கவும்.

(3806)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 19 - 05 - 1973

தாயக மண்ணில்: 19 - 12 - 1990

## கேள்வி கோரல்

இரண்டு சில்லு இயந்திரத்தின் பாவனைக்காக ஒரு உறுதியானபெட்டி வழங்கமுடியுமானவர்கள் பெட்டியின் சகல விபரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு கேள்விப் பத்திரங்களை 30 12-92 க்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
புலோலி பல நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

[சி5609]

யாழ் மிட்ரவுண் றோட்டரக்ட் கழகம் நடாத்தும்

## கோலப் போட்டி

யாழ். மாவட்டத்தில் மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
★ மெடிஎயிட்ஸ் (பார்மசி) நல்லூர்
★ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிச் சந்தி
★ தனலக்ஷ்மி புத்தகசாலை, சுன்னாகம்
★ ரதி ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை
★ திருக்கணித அச்சகம், சாவகச்சேரி.

விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்து அனுப்பப்பட வேண்டிய இறுதி திகதி தைமாதம் 4ஆம் திகதி

(3807) போட்டிக்குழு

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-19

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் ஆவரங்கால் அம்மன் கோவிலடிப் பகுதியில் இந்தியப் படையினர் சூட்டில் விழுப்புண்ணுற்ற நிலையில் தனது கைக்குண்டைத் தானே வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய-

அருணன் (வீரச்சாமி அருளம்பலம் தேவதாஸ் - நீர்வேலி மத்தி - யாழ் )

1988 ஆம் ஆண்டு கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

அலெக்ஸ் (சின்னத்துரை குணசேகரம் - கச்சாய் தெற்கு,கொடிகாமம் - யாழ்.)

மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கள்ளிக்கட்டைக் காட்டைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

யாழ். சுழிபுரத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 'விக்ரோறியா'க் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள்-

யாழ். ஆனைக்கோட்டையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு உன்னிச்சைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

பிரசாத் அமரசிங்கம் பேரின்பராசா - எருவில், களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு)

அளவெட்டியில் தேசவிரோதிகளால் கைது செய்து

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழிவிற்பனைக் குண்டு (புறோய்லர்) தொடர்புகொள்ளவேண்டியமுகவரி. பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்துமிடம்) திக்கம் வடிசாலைக்கு முன்பு. திக்கம்.

(3409)

## தேவை

பாவிக்கப்பட்ட அல்லது புதிதான ரியூப் லைற்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பாலன் (மோட்டார் சயிக்கிள் திருத்தும் இடம்), திக்கம் வடிசாலைக்கு முன்பு, திக்கம்.

(3408)

## திருட்டு

புலோலி கமநல சேவை நிலையத்தில் கடந்த திங்களன்று இரவு திருட்டு சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

(யோ)

## பரிசளிப்பு விழா

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக பிரதேசக் கல்வி பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்.

---

மலர்வு:

01 - 10 - 1972



உதிர்வு

05 - 11 - 1992

## லெப்.பார்த்தீபன் (வினாயகம்)

[ஐயாத்துரை பிரபாகரன்]

கடலரசன் அலை புரண்டு
கரையோரம் தவழ்ந்து வந்து
தமிழீழத் தாய் மடியில்
நீள் துயில் மாவீரனே!

கதறி அழும் பெற்றோரின்
கண்கள் குளமாகக் கண்ணீர்
கரைபுரண்டு முத்தாய் நிலமுதிர
கன்னித் தாய் சிலிர்த்தெழுந்து

புலிவீரர் பலர் தோன்ற வைப்பாள்
புவியெங்கும் நடுநடுங்க வைப்பாள்
புலி வீரா பார்த்தீபா! உன்றன்
புகழோங்கும் தமிழீழம் எங்கும்

உதிரோவத்தை, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை
19-12-92

தாய், சகோதர, சகோதரிகள், அம்மம்மா, சிற்றன்னை குடும்பத்தினர். மாமமார், மாமிமார், மைத்துனர், மைத்துனிகள்.

(3233)

---



05 - 1973

தாயக மண்ணில்

19 - 12 - 1990

## வீரவேங்கை சஜீவனா

[கணபதிப்பிள்ளை சாந்தினி]

ஈழத்தில் பிறந்தாயே சஜீவனா!
ஈழத்தின் விடுதலைக்காக - உன்
உயிரையே ஈந்தாயே!
கட்டுவனில் சிந்திவிட்டாய் உன் செங்குருதி!
இணையற்ற உன் இலட்சியப்
பயணத்தின் பாதச்சுவடுதனை
நோக்கி எம் பயணங்கள் தொடரும்
உமக்கும் உம்மோடு உயிர் நீத்த
மாவீரர்களுக்கும் நாம் இன்று
நினைவு கூருகின்றோம்.

சஜீவனா வீதி, மல்லாகம்

(3792)

ஐயா, அம்மா, அண்ணாமார், அக்காமார் தம்பிமார். அத்தான், அண்ணி

---


என்றும் எப்பொழுதும்

தேவைக்கேற்ப
மொத்த சில்லறை விலைகளில் விநியோகம் செய்பவர்கள்

நாட்டரிசி தரம் 1 — தரம் 2

உடைத்த பச்சை அரிசி — தீட்டல் பச்சை

அனைத்தும் தரத்துடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்....

கே. வீ. கே. அரிசி ஆலை
உடுப்பிட்டி

(சி/5604)


---

அருணன் (வீரச்சாமி அருளம்பலம் தேவதாஸ் - நீர்வேலி மத்தி - யாழ்)

1988 ஆம் ஆண்டு கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

அலெக்ஸ் (சின்னத்துரை குணசேகரம் - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்.)

மன்னாரில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கள்ளிக்கட்டைக் காட்டைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

யாழ். சுழிபுரத்தில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 'விக்ரோறியா'க் கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் -

யாழ். ஆனைக்கோட்டையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு உன்னிச்சைப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

பிரசாத் அமரசிங்கம் பேரின்பராசா - எருவில், களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு)

அளவெட்டியில் தேசவிரோதிகளால் கைது செய்து கொண்டு செல்லப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளர்களான மூவர்.

இதே பகுதியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட - கட்டாய இராணுவப் பயிற்சிக்குப் பிடித்துச் செல்கையில் தப்பி ஓடிய 3 தமிழ் இளைஞர்களின் - பெற்றோர்கள்.

1990 ஆம் ஆண்டு கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -

கப்டன் சுந்தரி (உதயலட்சுமி உருத்திராபதி - சில்லாலை, நெடியகாடு, வல்வெட்டித்துறை-யாழ்.)

சஜீவனா (சாந்தினி கணபதிப்பிள்ளை - ஆலை ஒழுங்கை, மல்லாகம் - யாழ்.)

ஆனந்தி (கிருஸ்ணலீலா ஐயாத்துரை - கணுக்கேணி, தண்ணீரூற்று - முள்ளியவளை)

கேரனா (ஜெகதீஸ்வரி ஜெகநாதன் - வீரஞ்சோலை, 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருக்கோணமலை)

ஜெனோவா (றெக்சியா பிலிப் - 191/3, கடற்கரை வீதி, பாசையூர் - யாழ்.)

சுகந்தா (வசந்தமலர் கோபாலப்பிள்ளை-கல்விளான் வீதி, துணுக்காய் - யாழ்.)

தேசிகா (அருள்நாயகி செபஸ்தியாம்பிள்ளை - 98, கோணாவில் - கிளிநொச்சி)

நிரஞ்சனா (பாக்கியதேவி குஞ்சுத்தம்பி - நாகர் கோவில் - வடமராட்சி)

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் இடிபாடுகள் பக்கமாகச் சென்றபோது மிதிவெடியில் சிக்கி கால் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். மருத்துவமனையில் சாவெய்திய தமிழ்ப் பொதுமகன்.

இராணுவ முகாமுக்கு கையொப்பமிடச் சென்று காணாமல் போன மட்டக்களப்பு - புதுநகரைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண் அடைந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

சுஜே (பானுமதி பெருமாள் - இல. 58, கல்லூரிவீதி, காங்கேசன்துறை - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5608)

# அடிப்படை வசதிகள் கூட படையினருக்கு இல்லை

## காமினி பொன்சேகா கவலை

சில முகாம்களிலுள்ள இராணுவத்தினருக்கு எதுவித அடிப்படை வசதிகளுமின்றி மிகவும் சிரமப்படுவதை நான் சமீபத்தில் நேரில் சென்று பார்வையிட்டேன் 70 இராணுவத்தினர் இருக்கும் ஒரு முகாமுக்கு விஜயம் செய்த போது அங்கு பாதி பறங்கிக்காயும் ஒரு சில மரவள்ளிக் கிழங்குகளும் ஓரிரண்டு பிடி சின்ன வெங்காயமும் இருக்கக்கண்டு அதிர்ச்சியடைந்தேன்'.

இவ்வாறு பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா பாராளுமன்றத்தில் பேசும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது-

இந்த இராணுவ வீரர்கள் நிம்மதியாக நித்திரை கொள்ள தலையணை இல்லை.

இரு கம்புகளில் பெட்டிகளை இணைத்தே உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. மாலை 3.30 மணிக்கே உணவு கிடைக்கின்றது. இவர்களின் பிள்ளைகளை பெரிய பாடசாலைகளில் ஏற்க மறுக்கின்றனர். இவர்களுக்கு எட்டு மாதங்களாக சிகரட் கொடுக்கப்படவில்லை. காட்டில் இருக்கும் இவர்களுக்கு பிஸ்கட் கூட கிடைக்காதிருப்பது மிகத் துரதிர்ஷ்டமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் மீது பொலிஸ் தடியடி

## 60 தொழிலாளர் காயம்

(நீர்கொழும்பு)

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்த கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய ஊழியர்கள் மீது பொலிஸார் குண்டாந்தடி பிரயோகம் செய்ததினால் சுமார் 60 பேர் படுகாயம் அடைந்து நீர்கொழும்பு கம்பஹா மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேலையை பகிஷ்கரித்த ஊழியர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சு உட்பட குண்டாந்தடி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காயம் அடைந்தவர்கள் அனைவரும் ஒரே நிறுவனத்தில் தொழில் புரிந்தவர்கள் ஆவர். இத்தொழிற்சாலையில் சுமார் 600க்கு மேற்பட்டவர்கள் தொழில் புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கைதான தமிழர் விபரம் சேகரிப்பு

நாட்டின் பலபாகங்களிலும் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களது விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது

இவ் விபரங்களை மனித உரிமைகள் பணியகக்குழு சேகரித்து வருகிறது 1988 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை மகசின் சிறைச்சாலையிலும் 1990 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டுவரை களுத்துறைச் சிறைச்சாலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

# உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவர் விளக்கமறியலில்

## - மோசடியில் ஈடுபட்டனராம்

(கொழும்பு)

வருடாந்த மேலதிக கொடுப்பனவுகளை ஊர்காவற்படையினருக்கு வழங்காமல் கையாடிய இரண்டு உயர்பொலிஸ் அதிகாரிகள் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் ஜனவரி 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

1989 ம், 1990 ம் ஆண்டுக் காலப் பகுதியில் கிராமப்புற பாதுகாப்பிற்கென சேவையிலீடுபடுத்தப்பட்ட 240 ஊர்காவற்படையினருக்கு வழங்க வேண்டிய 19, 22, 490 ரூபா வைமோசடி செய்ததாக இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# அஷ்ரப்புடன் ஒத்துழைக்க ஹிஸ்புல்லாவிற்கு லஞ்சம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா அக் கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்புடன் சண்டையிடாது தணிந்து போகுமாறு அவருக்குத் தான் 50,000 ரூபா கொடுத்ததாக கண்டிமாவட்ட ஐ தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எ. ஆர் எம் அப்துல்காதர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட விடயங்களைப் பாராளுமன்றத்தில் பேசக் கூடாது என்று ஹிஸ்புல்லா ஆட்சேபம் தெரிவித்துப் பேசியதை அடுத்துப் பாராளுமன்றத்தில் குழப்பம் நிலவியது.

ஹிஸ்புல்லா சபா நாயகரின் வேண்டுகோளையும் மதியாது தொடர்ந்து பேசினார்

ஹிஸ்புல்லாவைப் பாதுகாப்பு அதிகாரி உடல் ரீதியாக வெளியேற்றும்நோக்கத்துடன் சபையைச் சபாநாயகர் பத்து நிமிடங்கள் ஒத்திவைத்தார்.

சபையிலிருந்து வெளியேறிய ஹிஸ்புல்லா சபைக்குவெளியே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்புடன்காணப்பட்டார்.

# வட்டிவீதம் அதிகரிப்பதற்கு வங்கியின் குறைபாடே காரணம்

## - அமைச்சர் ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்காவில் நிலவும் உயர்வான வட்டி விகிதத்துக்கு இரு அரச வங்கிகளினதும் திறமையீனம்தான் காரணமாகும் இவ்வாறு கைத் தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்

தாஜ் சமுத்திராவில் நடைபெற்ற தேசிய வர்த்தக சம்மேளனத்தின் 34 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வங்கித்துறையில் இரு வங்கிகள் ஆதிக்கம் செலுத்துவதை நாம் விரும்பவில்லை வங்கித் துறையில் தனியார் வங்கிகள் தமது பங்களிப்பை அதிகரித்துள்ளது நன்மையானது என்று கூறிய அவர்,

அரச இரு வங்கிகளையும் புனரமைக்க முயற்சி எடுத்துள்ளது இதனை வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும் ஆதரிக்க வேண்டும் என்றார்.

தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் பதவியிலிருந்து விலகும் எல். எல். சமரசிங்கா தனது உரையில், வியாபார மொத்த வரியையும், தேசிய பாதுகாப்பு நிதியையும் வாடிக்கையாளர் மேல் சுமத்தியதால்தான் இந்த வட்டிவிகித அதிகரிப்பு என்றார்

சிந்தனைக்கு

ஒரு மாதம் முழுவதும் நூலைப் பயன்படுத்துவதை விடவும், ஒரு நாளைக்கு ஊசியைப்பயன் படுத்துவது மேலானது.

— திபெத் நாட்டுப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 19-12-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண் - 05

# பேச்சளவில் மட்டுமே

இம்மாசம் 10ஆம், 11ஆம்திகதிகளில் பங்களா தேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெறவிருந்த 'சார்க்' உச்சி மாநாடு அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடியினால் ஒத்திப்போடப்பட்டுள்ளது மீண்டும் இம்மாநாடு ஜனவரி 13ஆம், 14ஆம் திகதிகளில் டாக்காவில் நடைபெறும் எனத் தற்பொழுது அறிவிக்கப் பட்டிருப்பினும், அதுவும் திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது கேள்விக்குரியதே.

தென்னாசிய நாடுகளின் ஒத்துழைப்புக்கென உருவாக்கப்பட்ட 'சார்க்' அமைப்பின் உச்சிமாநாடு ஒத்திவைக்கப்படுவது இது தான் முதற் தடவையில்லை. இம்மாநாடுகள் ஆரம்பித்ததில் இருந்தே ஏதோ ஒரு வகையில் ஒத்திவைக்கப்படுவதும், நடக்குமா? நடக்காதா? என்ற ஐயப்பாட்டுடன் இறுதி நேரம் வரை குழப்பம் நிலவுவதும் சாதாரணமான தொன்றே.

'சார்க்' அமைப்பின் அடிப்படை விதிகள் ஒரு நாட்டின் உள் நாட்டு விவகாரத்தில் மற்றைய நாடு தலையீடு செய்யக்கூடாது என திட்டவட்டமாக வலியுறுத்துகின்ற போதும், ஒரு நாட்டின் உள் விவகாரம் எனக் கூறப்படும் விவகாரங்களில் மற்றைய நாடுகள் தலையிடுவதே 'சார்க்' அமைப்பு இவ்வாறு அடிக்கடி நெருக்கடிக்கு உள்ளாவதற்குக் காரணமாகும்.

இம்முறை, அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டமையும், இதனால், இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகியவற்றில் நிகழ்ந்த கலவரங்களும் இவ்வாறு பிற்போடுவதற்குக் காரணமாகின. ஒரு நாட்டிலுள்ள தமது இன, மத மக்கள் தாக்கப்படும் போது. அல்லது அவர்களது பண்பாட்டு கலாசார சின்னங்கள் தகர்க்கப்படும்போது அண்டை நாட்டிலுள்ள அவ் இன, மத மக்கள் உணர்ச்சி வசப்படுவதும், இதனால் சில அசம்பாவிதங்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கலாம்.

ஆனால், இம் மக்களின் உணர்வுகளுக்கு

# சிரித்திரன் வெளிவந்துள்ளது

சிரித்திரன் கார்த்திகை, மார்கழி இதழ் வெளிவந்துள்ளது. சிரித்திரன் ஆசிரியர் சுந்தர்வரைந்துள்ள கருத்தோவியம்இதன் அட்டையை அலங்கரிக்கின்றது.

இந்த இதழில் ''மகுடி''—கேள்வி பதில்கள், சுவைமீட்டல் GOULD இன் குறும்பு— வல்லை ந. அனந்தராஜ் எழுதும் நகைச்சுவைத் தொடர், ''கண்ணன்எமதுநாதநிதியம்''—பிரபல இசையமைப்பாளர் கண்ணனுடன் ராகமாலிகையின் சந்திப்பு, சிரித்திரன் சிக்கல் போட்டி II, ''விண்ணில் பறக்கும் புகைக்கூண்டுகள்''—சுவர்ணகேசரியின் குறிப்புக்கள் சிரித்திரன் ஆகரா''தி, மையோன் எழுதிய ''குறுமணி'' ஆகிய அம்சங்களுடன் கரும்பறவை எழுதிய ''மாறும் காலமும் மாறாத நினைவுகளும்'' என்ற நினைவு மீட்டற் கட்டுரையும் இடம் பெறுகின்றது.

# விளையாட்டுப் போட்டி

நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகமும் நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் 'சிவபரன் பாலர் பாடசாலை' யின் விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

திரு. இ. சரவணமுத்து, ப. மகேந்திரதாஸன்ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

# 40 எம். பிக்கள் கட்சி ஒழுங்கை மீறியுள்ளனர்

## சிறிமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி ஒழுங்கை மீறியுள்ளதாக இக்கட்சியின் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்

மேற்படி 40 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடந்த 14 ஆம் திகதி இவ்விடயம் குறித்து கட்சித் தலைவியினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது

# மினிபஸ் சேவை

பயணிகள் நன்மைகருதி மீண்டும் தாவடி மானிப்பாய் ஊடாகயாழ் மருதனார்மடம் சிற்றூர்தி சேவை நடைபெறுகின்றது.

சிலகாலம்தடைப்பட்டிருந்த மேற்படியாதையிலான சிற்றூர்தி சேவை கடந்த புதன் முதல் செயற்படுகிறது என வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்க நிர்வாகபொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# 'சார்க்' மீண்டும்

# 400 பாலஸ்தீனியர்களை

உள் விவகாரம் எனக் கூறப்படும் விவகாரங்களில் மற்றைய நாடுகள் தலையிடுவதே 'சார்க்' அமைப்பு இவ்வாறு அடிக்கடி நெருக்கடிக்கு உள்ளாவதற்குக் காரணமாகும்.

இம்முறை, அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் இடிக்கப்பட்டமையும், இதனால், இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகியவற்றில் நிகழ்ந்த கலவரங்களும் இவ்வாறு பிற்போடுவதற்குக் காரணமாகின. ஒரு நாட்டிலுள்ள தமது இன, மத மக்கள் தாக்கப்படும் போது, அல்லது அவர்களது பண்பாட்டு கலாசார சின்னங்கள் தகர்க்கப்படும்போது அண்டை நாட்டிலுள்ள அவ் இன, மத மக்கள் உணர்ச்சி வசப்படுவதும், இதனால் சில அசம்பாவிதங்கள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கலாம்.

ஆனால், இம் மக்களின் உணர்வுகளுக்கு ஆட்சியாளர்களும் அரசியல் வாதிகளும் உடந்தையாகவும், ஊக்குவிப்பவர்களாகவும் இருப்பதுதான் மோசமான நிலையாகும். அயோத்தி சம்பவத்தை அடுத்து பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலுமுள்ள இந்திய தூதரகங்கள் தாக்கப்பட்டன. 'சார்க்' நாடுகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இடைநடுவில் நிறுத்தப்பட்டது. இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. பல இந்துக்கள் கொல்லப்பட்டனர். இந்தியாவில் இந்துக்கள் - முஸ்லிம்கள் என இருபகுதியினரும் கொல்லப்பட்டனர். ஆனால், இச்சம்பவங்கள் குறித்து நாடுகள் பரஸ்பரம் குறைந்தது கவலையாவது தெரிவித்துக் கொண்டதாக இல்லை.

மாறாக, பிராந்திய நாடு ஒன்றின் மீது, அண்டைய பிராந்திய நாடுகளுடன் சேர்ந்து நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றன, அத்தோடு பரஸ்பரம் ஒன்றின் மீது ஒன்று குற்றச்சாட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஒன்றை ஒன்று எச்சரிக்கையும் செய்து வருகின்றன.

இதற்கும் மேலாக பரஸ்பரம் தூதுவராலய அதிகாரிகளைஉளவு வேலைபார்த்ததாகக் குற்றம் சாட்டிக் கடத்திச் செல்வதும், சித்திரவதை செய்வதும், நாடுகடத்துவதும் வழமையான நடவடிக்கையாகி விட்டது. பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் பரஸ்பரம் மற்றைய நாட்டு தூதுவராலய அதிகாரிகளே பாதுகாப்பாக இருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. அத்தோடு, மற்ற நாட்டிற்குப் பயணம் மேற்கொள்ளும் பிரஜைகள்கூடப் பாதுகாப்புடன் பயணம் செய்ய முடியாத நிலை உள்ளது.

இந்நிலையில், பிராந்திய ஒத்துழைப்பிற்கென உருவாக்கப்பட்ட 'சார்க்' அமைப்பு எவ்வாறு திறம்படச் செயலாற்ற முடியும்? தென் ஆசிய நாடுகளில் உண்மையிலேயே சமாதானம் நிலவ வேண்டும் எனில் முதலில் இந்நாடுகள் ஒன்றின் மீது ஒன்று நல்லெண்ணமும் நம்பிக்கையும் வளர்க்க வேண்டும் இதற்கேற்றவாறு பிராந்திய நாடுகள் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் இந்நாடுகளின் நல்லுறவு என்பது வெறும் பேச்சளவினதாக மட்டுமே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

---

மணி'' ஆகிய அம்சங்களுடன் கரும்பறவை எழுதிய ''மாறும் காலமும் மாறாத நினைவுகளும்'' என்ற நினைவு மீட்டற் கட்டுரையும் இடம் பெறுகின்றது.

தனிப்பட்ட விடயங்களைப் பாராளுமன்றத்தில் பேசக் கூடாது என்று ஹிஸ்புல்லா ஆட்சேபம் தெரிவித்துப் பேசியதை அடுத்துப் பாராளுமன்றத்தில் குழப்பம் நிலவியது.

## 40 எம். பிக்கள் கட்சி ஒழுங்கை மீறியுள்ளனர்

### சிறிமாவோ அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி ஒழுங்கை மீறியுள்ளதாக இக்கட்சியின் தலைவி சிறிமாவோபண்டார நாயக்கா அறிவித்துள்ளார்

மேற்படி 40 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடந்த 14 ஆம் திகதி இவ்விடயம் குறித்து கட்சித் தலைவியினால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது

## விளையாட்டுப் போட்டி

நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகமும் நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் 'சிவபரன் பாலர் பாடசாலை' யின் விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

திரு. இ. சரவணமுத்து, ப. மகேந்திரதாஸன்ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

சிங்கா தெரிவித்தார்

தாஜ் சமுத்திராவில் நடைபெற்ற தேசிய வர்த்தக சம்மேளனத்தின் 34 ஆவது வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வங்கித்துறையில் இரு வங்கிகள் ஆதிக்கம் செலுத்துவதை நாம் விரும்பவில்லை வங்கித் துறையில் தனியார் வங்கிகள் தமது பங்களிப்பை அதிகரித்துள்ளது நன்மையானது என்று கூறிய அவர்,

அரசு இரு வங்கிகளையும் புனரமைக்க முயற்சி எடுத்துள்ளது. இதனை வர்த்தகர்களும், வாடிக்கையாளர்களும்

யும் வாடிக்கையாளர் மேல் சுமத்தியதால்தான் இந்த வட்டிவிகிதஅதிகரிப்புஎன்றார்

## மினிபஸ் சேவை

பயணிகள் நன்மைகருதி மீண்டும் தாவடி மானிப்பாய் ஊடாகயாழ் மருதனார்மடம் சிற்றூர்தி சேவை நடைபெறுகின்றது.

சிலகாலம்தடைப்பட்டிருந்த மேற்படிபாதையிலான சிற்றூர்தி சேவை கடந்த புதன் முதல் செயற்படுகிறது என வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்க நிர்வாகபொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# 400 பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் நாடு கடத்தியது

(டெல்அவிவ்)

இஸ்ரேலிய உச்சநீதிமன்றம் அரசுக்கு அனுமதி அளித்ததைத் தொடர்ந்து சுமார் நானூறு பாலஸ்தீனியர்கள் லெபனானுக்கு நாடு கடத்தப் பட்டுள்ளனர்.

இவர்கள் மீது குற்றம்சாட்டப்படவும் இல்லை விசாரணை நடத்தப்படவுமில்லை ஆனால் இஸ்ரேலிய படையினரையும் பொதுமக்களையும் கொலை செய்துவரும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளுடன் இவர்களுக்கு தொடர்புகள் இருப்பதாக இஸ்ரேலிய பிரதமர்யிட்சாத் ராவின் கூறியுள்ளார்.

இதேவேளை வெளியேற்றப்பட்ட பாலஸ்தீனியர்கள் தாயகம் திரும்ப அனுமதிக்கப்படாவிட்டால் மேற்காசியாவில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களைப் புறக்கணிக்க நேரிடும் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது

## உலகம் ஆச்சரியப்படக் கூடாது இரக்கமற்ற யுத்தம் நடத்தப்படும்

### -இஸ்ரேலிய பிரதமர்

[ஜெருசலேம்]

இஸ்ரேலிய சார்ஜன்ட் மேஜர் நிஸிம் டொலெடானோவைக் கடத்திச் சென்று கொலை செய்த முஸ்லிம் கெரிலாக்களுக்கு எதிராக இரக்கமற்ற யுத்தத்தை மேற்கொள்ளப் போவதாகவும் கடுமையான புதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவிருப்பது பற்றி உலகம் ஆச்சரியப்படக் கூடாது என்றும் பிரதமர் யிட் ஷாக்ரபின் எச்சரித்திருக்கிறார்.

இஸ்ரேலிய சார்ஜன்ட் மேஜரின் உடல் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் வீதி ஒன்றுக்கருகில் கிடப்பதைத் துருப்புக்கள் கண்டுபிடித்தன. ஹமாஸ் இஸ்லாமிய எதிர்ப்பு முன்னணி இரண்டு நாட்களுக்கு முன் அவரைக் கடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது

இம்முறை நாங்கள் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவது குறித்து உலகம் ஆச்சரியப்படக் கூடாது. இஸ்ரேலிய சட்டத்தின் கீழ் எந்த வழியில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த கைய சகலவற்றையும் இந்தப் பயங்கரவாதத்தைச் சமாளிக்கும் பொருட்டு நாங்கள் எடுத்துக் கொள்வோம் எனப் பிரதமர் ரபின் கூறினார்.

சிறை வைக்கப்பட்டிருக்கும் ஹமாஸ் ஸ்தாபகரான ஷேக் அஹ்மத்யாஸின் விடுதலை செய்யப்படாவிட்டால்இஸ்ரேலிய ராணுவ அதிகாரியைக் கொலைப் போவதாக கெரிலாக்கள் தெரிவித்திருந்தனர். யாஸின் விடுதலை செய்யப்படாவிட்டால் மேலும் பல இஸ்ரேலிய வீரர்களைக் கடத்திச் செல்லப்போவதாக பெருட்டிலுள்ள ஹமாஸ் தலைவர் கூறியதுடன் டொலெடானோவின் மரணத்துக்கு இஸ்ரேலே காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

டொலெடானோ மிகக் கீழ்த்தரமான மனிதர்களால்-ஹமாஸின் காட்டு மிருகங்களால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என பிரதமர் ரபின் பாராளுமன்றத்தில் கூறினார்.

ஹமாஸிக்கு எதிரான நடவடிக்கையில் 1200 க்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கைது செய்திருப்பதாகவும் இரக்கமற்ற வகையில் கைது நடவடிக்கை மேலும் தொடரும் எனக்கூறிய அவர் இஸ்ரேலிய மக்கள் பலாத்காரத்தை மேற்கொள்ளாதிருக்கும் படியும் அவர் கேட்டுள்ளார்.

## 'சார்க்' மீண்டும் ஒத்திவைக்கப்படலாம்

(டாக்கா)

இந்தியாவில் நிலவும் பதற்ற நிலை காரணமாக மீண்டும் ஓர் முறை சார்க் மாநாடு ஒத்திவைக்கப்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தூதுவராலயங்களையும், அரசியல் அவதானிகளையும் மேற்கோள் காட்டி பங்களாதேஷ் பத்திரிகைகள் ஆரூடம் தெரிவித்துள்ளன.

இம்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் நடைபெறவிருந்த சார்க் மாநாட்டை இந்தியாவில் நடைபெற்ற கலவரங்களினால் ஜனவரி 13-ம், 14-ம் திகதிகளில் நடத்துவதாகச் சார்க் தலைவர்கள் முன்னர் தீர்மானித்திருந்தது தெரிந்ததே.

தற்போது இந்தியாவில் தொடர்ந்து நிலவிவரும் பதற்றம் காரணமாக இந்த மாநாட்டை மீண்டும் ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என ''பெங்கள் பாஷ்'' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## எல்லைப்புற கிராமவாசிகளுக்கு அடையாளஅட்டை வழங்கப்படும்

(டில்லி)

நாட்டின் பாதுகாப்பு கருதி தமிழ்நாடுஉட்பட சிலஎல்லைப்புற மாநிலங்களில் இருக்கும் சில குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்க இந்தியமத்திய அரசுதீர்மானித்துள்ளது

நேற்று முன்தினம் மக்களவையில் இதனை அறிவித்த உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் இதற்கான மசோதா விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்தார்.

1986 இல் ராஜஸ்தான் மாநிலத்தின் சில பகுதிகளில் இத்திட்டம் சோதனை அடிப்படையில் கொண்டு வரப்பட்டதாகவும், அது நல்ல பயன் அளித்திருப்பதையடுத்து தமிழ்நாடு, பஞ்சாப், காஷ்மீர் மற்றும் வட, கிழக்கு மாநில எல்லைப் புறங்களில் இத்திட்டம் அமுலாக்கப்பட இருக்கிறது. என்றும் தெரிவித்தார்

## அஸாமில் கலவரம் தொடர்கிறது

வட கிழக்கு மாநிலமான அஸாமில் மீண்டும் இந்து-முஸ்லிம் கலவரம் ஏற்பட்டுள்ளது

இச் சம்பவங்களில் இரண்டு நாள்களில் பத்துப் பேர் இறந்தாக அதிகாரிகள் கூறுகிறார்கள். அயோத்தி பாபர்மசூதி தகர்க்கப்பட்டது தொடர்பான மதக் கலவரங்களில் அஸாமில் ஏற்கனவே 80 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

## ஐ. நா. அமைதிப் படையுடன் ஒத்துழைப்பது நிறுத்தப்படும்

### - இளவரசர் சியானோக் அறிவிப்பு

(கம்போடியா)

ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையினர் கம்போடியாவில் அமைதி காக்கத் தவறியிருப்பதனால் தாம் அவர்களோடு ஒத்துழைப்பதை நிறுத்திக் கொள்ளப் போவதாக கம்போடியத் தலைவர் இளவரசர் சொலறம் சியானோக் கூறியுள்ளார்.

எனினும் கம்போடியாவில் அரசியல் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் சமாதானப் படையினர் தம்மை முற்றாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாக அப்படையின் தளபதி சஜீசி அக்காஷே கூறியுள்ளார். இதற்கிடையில் கம்போடிய அகதிகள் குழுவொன்று தாய்லாந்திலிருந்து தமது தாய்நாடு திரும்பியது. இக்குடிபெயர்வை ஐ. நா. அமைதிப் படையினர் கண்காணித்தனர்.

இதேவேளை 1991 ஆம் ஆண்டு நான்கு பிரிவினர் பரீசில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின்படி அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை ஐ. நா. அமைதிப் படைகள் நாட்டைக் கண்காணிக்கும். ஒரு கெரில்லாக்குழு மட்டுமே உடன்படிக்கைக்கு இணங்க மறுத்துள்ளது.

## வெடிகுண்டுகளுடன் கைது

(சென்னை)

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் ஒருவரிடமிருந்து ஐந்து நாட்டு வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டதுடன், சம்பந்தப்பட்டவரைப் பொலிஸார் கைது செய்தனர். விசாரணை நடைபெறுகிறது.

ஈழநாதம்

# தெரிவுக்குழுவின் யோசனை பிரச்சினைக்கு பரிகாரமாகவில்லை

## - டோக்கியோ மாநாட்டில் விஜயசிங்கம்

(டோக்கியோ)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு முன்வைத்துள்ள தீர்வு யோசனை பிரச்சினைக்கு பரிகாரமாக அமையவில்லை. மாறாக நோயை இனங்காட்டவே அது உதவியிருக்கிறது.

இவ்வாறு டோக்கியோவில் நடைபெற்ற உலக சமதானம் தொடர்பான ஆசிய பசுபிக் தொழிற்சங்கங்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆலோசகர் திரு. விஜயசிங்கம் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் இவர் கலந்து கொண்டார்.

டோக்கியோ உலகசமாதான மாநாட்டில் இலங்கை இனப்பிரச்சினை பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; தொண்டமான் தலைமையில் சமாதான இயக்கமொன்று முன்னெடுத்துச் செல்லப்படுகிறது புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் சமாதான இயக்கங்களின் பணிகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

உலகின் பல பாகங்களிலுமுள்ள சமாதான இயக்கங்கள் நாடுகளுக்கிடையில், தேசங்களுக்கிடையில் நடைபெறும் யுததங்களை நிறுத்துவதற்கு மட்டுமல்ல சொந்த நாடுகளுக்குள்ளேயே நடைபெறும் யுத்தத்தையும் நிறுத்துவதற்கும் பாடுபட வேண்டும்.

இலங்கையில் இனங்களுக்கிடையே நடைபெறும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர அமைச்சர் தொண்டமான் தலைமையில் சமாதான இயக்கமொன்று இப்பொழுது தீவிரமாக செயற்படுகின்றது என இலங்கையில் சமாதானம் பற்றி பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

ஒஸ்கா விளையாட்டுக்கழகம் நடாத்தும்

## உதைபந்தாட்டப் போட்டி

இவ்வாட்டத்தில் பங்குகொள்ளும் அணிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ முருகன் | Vs | றோயல் |
| 2. | பாடும்மீன் B | Vs | கலைவாணி [நாவாந்துறை] |

போட்டிகள் இன்று [19-12-92] பி.ப.3.00மணிக்கும்

20-12-92 நாளைய இறுதியாட்டம்

| | | |
|---|---|---|
| தொடர்மாடி வி. க. | Vs | சண்ஸ்ரார் |
| சென்றோக் வி. க. | Vs | பாடும்மீன் வி. க. |

கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடைபெறும்

(3811) (3815)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில்

03 — 09 — 1970



தமிழ்த் துரோகியர் சதியில்

19 — 12 — 1989

## நாகராஜா சூரியபாலன்

திதி: 17-12-1992

மானம் பெரிதென்று மார்பினிலே குண்டேற்று
வானம் புகுந்தனையோ வாழும் வயதினிலே
ஈனமதி கொண்ட ஈழத்துத் துரோகியரால்
தானமாய் உனதுயிரைத் தமிழ் மண்ணுக்களித்தனையோ
உனது ஆத்மா அமைதி கொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.

---

அணியணியாக

கொண்டிருந்தன பீதியடைந்த நிலையில் சத்தமில்லாது படுத்துவிட்டேன்.

சிறுது நேரத்தில் மெதுவாக தவழ்ந்து சென்று ஒரு வீட்டின் பின்புறத்தில் ஒளித்துக் கொண்டேன். அவ் வீட்டின் முன்புறமும் இராணுவத்தினர் நின்று கதைத்துக் கொண்டிருப்பது கேட்டது. சிறிது தூரத்தில் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்களையும் சிதறல்கள் பறந்து வந்து வீழ்வதையும் அவதானித்தேன். வீடுகள் உடைக்கப்பட்ட சத்

---

## கடலகவளம் கருத்தரங்கு

கடலகவளம் சார் கல்வி அறிமுகக் கருத்தரங்கு இன்று ஒன்பது மணியளவில் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராசா, யாழ்ப்பாண பிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கும் இக்கருத்தரங்கு ஏற்பாடுகளை பல்கலைக்கழக விலங்கியல் துறையினரும், தொண்டமானாறுவெளிக்கள நிலையத்தினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கடலகவளம் பற்றிபாடசாலைகளில் போதிக்க இருக்கும் ஆசிரியர்கள் அனைவரும் கேட்கப்பட்டுள்ளனர்.

## அடையாளம் காணப்படாத ஆணின் சடலம்

(வடமராட்சி)

துன்னாலை வடக்குப் பகுதியில் புளியங்கள் பிள்ளையார் கோவில் கிணற்றில் இருந்து நேற்று மீட்கப்பட்ட ஆணின் சடலம் ஒன்று அடையாளம் காண்பதற்காக மந்திகைவைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளது.

அடையாளம்காணப்படாத இச் சடலம் 45 வயதுடையதும், 5 அடி உயரத்தையும், சுமாரான தோற்றத்தையும் கொண்டது. தலை மயிர் கட்டையாக வெட்டப்பட்டுமுள்ளது.

இவரது உடலில் சிறு காயங்களும் காணப்பட்டதோடு வெள்ளை நாலுமுழ வேட்டியும் காணப்பட்டது.

இவரது மரணம் தொடர்பாக இன்று மந்திகை வைத்திய சாலையில் மரண விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசா தெரிவித்தார். (யோ)

---

வல்லை

பாடசாலை சிறிதுசேதமடைந்துள்ளது.

குடியிருப்புகள் நாசம்

கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட அறுபதிற்கு மேற்பட்ட எறிகணைகள் தோப்பூர், பத்தமேனி, கதிரிப்பாய், வளலாய் இடைக்காடு, அச்சுவேலி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் இப்பகுதிகளில் முப்பதிற்கு மேற்பட்ட குடிமனைகள் நாசமாகியுள்ளன. (யோ)

---

இனப்பிரச்சினை

பென்ஹம் தெரிவித்துள்ளார்.

"நீண்ட நாட்களாக இறுதித் தீர்வொன்றைக் காண முடியாதிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் விரைவில் தீர்வு ஏற்படும் என நம்புகிறேன்" எனவும் அவர் தெரிவித்தார்.

---

துப்பாக்கி சூடுகளும் கேட்டன மாலை 4.00 மணியளவில் சத்தங்கள் ஓய்ந்து விட்டன. மெதுவாக எழுந்து எட்டிப் பார்த்த போது இராணுவம் எவரையும் காணவில்லை மெதுவாக வீட்டை விட்டு வெளியேறி வந்து சேர்ந்தேன்.

---

# 60 இ.தொ.கா. அதிகாரிகள் கட்சியிலிருந்து வெளியேற்றம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில்பணியாற்றும் அறுபது மூத்த அதிகாரிகள் தமது பதவிகளைத் துறந்து ஜனநாயகஐக்கியதேசியமுன்னணியில் (டியு. என். எப்.) இணைந்து கொள்ள முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் பணியாளர்கள் தம்முடன் இணைந்து சுமார் 50,000 தோட்டத் தொழிலாளர்கள் காங்கிரஸை விட்டு வெளியேறுவர் எனக் கூறியுள்ளனர். இவர்கள் ஏற்கனவே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியோடு தொடர்பு கொண்டிருப்பதாகவும், இவர்களின் உறுப்புரிமையை ஏற்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளைஇ தொ காவின் உயர் மட்டத்தினர் தலைமை அலுவலகமான காங்கிரஸ் இல்லத்தில் அவசர கூட்டமொன்றை நேற்று முன்தினமிரவு நடத்தியுள்ளனர். இதில் பிரிந்து சென்ற அதிகாரிகள் விடயம் தொடர்பாக ஆராயப்பட்டதாக கூறப்படுகிறது.

---

எறிகணை

கம் என்பவர் வல்லைப் பாலத்தைக் கடக்கும்போது துப்பாக்கி வேட்டுக்கு இலக்கானார். இவரது கையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

---

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

கிளாலியிலிருந்து வானில் யாழ்ப்பாணம் வந்த பெண் ஒருவர் மூளாயைச் சேர்ந்த S. முருகையன் என்பவரிடம் சில பொருள்களை கொடுத்து விட்டு மறந்து சென்றுவிட்டார். அப்பொருள்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

புகழுடல்

பி. ப. 2.00 மணி வரை வைக்கப்பட்டு, அச்சுவேலி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் 3.00-4.00 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

---

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா பாலசுப்பிரமணியம்

முத்தையா பாலசுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர் வவுனியா C. C T M S, அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் உபதலைவர், தலைவர் இந்து இளைஞர் கழகம், வவுனியா).

சரவணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசடி வீதி, 83/9 தஞ்சி ஒழுங்கையில் வசித்தவருமாகிய முத்தையா பாலசுப்பிரமணியம் 17-12-92 (வியாழன்) கொழும்பில் காலமானார்.

அன்னார் பத்மாதேவியின் அன்புக் கணவரும், சுரேசன் (பிரான்ஸ்), சுதர்சன் (லண்டன்). சபேசன் (யாழ் இந்துக் கல்லூரி உயர் தர வகுப்பு மாணவன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற முத்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கதிர்காமர் - இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், செல்லம்மா (கனடா), மாணிக்கவாசகர் (ராணிமில் வவுனியா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சௌந்தலாதேவி (பிரான்ஸ்), திருமுருகன் (பிரான்ஸ்), இரட்ணதேவி (ஜேர்மனி), கணபதிப்பிள்ளை (கனடா), பாலசுப்பிரமணியம், தவமணிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் இறுதிச் சடங்குகள் வவுனியாவில் நடைபெறும்.

83/9, தஞ்சி ஒழுங்கை
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
பா. பத்மாதேவி
[மனைவி]

(சி-5611)

---

### திருமதி செசிலியா அலெக்சாண்டர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பத்தாவத்தை சம்பிலிப்புநேரியார் பங்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மயிலங்கூடல் இன்னாசிமுத்து அலெக்சாண்டர் [காலஞ்சென்ற], வசாவிளான். சின்னப்பு இராஜநாயகம் ஆகியோரின் அன்பு மனைவியும், திருமதி M J P. இராஜநாயகத்தின் அன்புத் தாயாரும், முப்பத்தைந்து வருடம் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்தவரும், காலஞ்சென்ற சவரிமுத்து பிலிப்புபிள்ளை இராஜநாயகம் என்பவரின் மாமியாரும் ஆகிய திருமதி அலெக்சாண்டர் செசிலியா அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கட்டுடை, பாலசிங்கம் இல்லத்தில் காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிறு [20-12-92] மேற்படி இல்லத்திலும், ஆனைக்கோட்டை, அன்னம்மாள் ஆலயத்திலும் 10 மணி யளவில் பூரண ஈமச்சடங்குகளுடன் நிறைவேற்றப்படும். இத்தனைக் கண்ணாரும் குருக்கள், கன்னியர்கள். ஆசிரியர்கள் மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்

| | | |
|---|---|---|
| 03 |  | 19 |
| — | | — |
| 09 | | 12 |
| — | | — |
| 1970 | | 1989 |

## நாகராஜா சூரியபாலன்

திதி: 17-12-1992

மானம் பெரிதென்று மாசினிலே குண்டேற்று
வானம் புகுந்தனையோ வாழும் வயதினிலே
ஈனமதி கொண்ட ஈழத்துத் துரோகியரால்
தானமாய் உனதுயிரைத் தமிழ் மண்ணுக்களித்தனையோ
உனது ஆத்மா அமைதி கொள்ளப் பிரார்த்திக்கின்றோம்.


'வாழ்க' — பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(3802)

---

## 45 ஆம் நாள் நினைவலைகளில்...

| | | |
|---|---|---|
| வீரஜனனம் : |  | வீரச்சாவு |
| 19 | | 05 |
| \| | | \| |
| 01 | | 11 |
| \| | | \| |
| 1978 | | 1992 |

## லெப். உமைமாறன்

(முருகேசப்பிள்ளை ஜீவகுமார்)

(வளலாய், பத்தமேனி, ஒட்டகப்புலத்திலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்துடனான சமரில் வீரச்சாவடைந்தார்)

புதுக்குடியிருப்பு மண்ணில்
பூத்திருந்த போது
புது வாரிசு எமக்கென்று பூரித்தோம்
ஆனால்
இரு பத்து ஆண்டுகளில்
தாயகத்தின் மைந்தன் என்றே
தரணியெல்லாம் போற்ற
மாவீரனாகி மண்ணுக்கு உரமானாய்
இவ் வையகம் வாழும்வரை
வாழுமடா உன் நாமம்

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணாமார், அண்ணி,
அக்காமார், தம்பிமார், தங்கைமார்,
சிந்தப்பா, சித்தி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

4-ம்வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(சி5610)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

பொழுது தீவிரமாக செயற்படுகின்றது என இலங்கையில் சமாதானம் பற்றி பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### அணியணியாக

கொண்டிருந்தன பீதியடைந்த நிலையில் சத்தமில்லாது படுத்துவிட்டேன்.

சிறுது நேரத்தில் மெதுவாக தவழ்ந்து சென்று ஒரு வீட்டின் பின்புறத்தில் ஒளித்துக் கொண்டேன். அவ் வீட்டின் முன்புறமும் இராணுவத்தினர் நின்று கதைத்துக் கொண்டிருப்பது கேட்டது. சிறிது தூரத்தில் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்களையும் சிதறல்கள் பறந்து வந்து வீழ்வதையும் அவதானித்தேன். வீடுகள் உடைக்கப்பட்ட சத்தங்களாக இருக்கலாம் என எண்ணுகிறேன்.

சரமாரியாக பலமணி நேரம் வெடித்தன இதனால் இப்பகுதிகளில் முப்பதிற்கு மேற்பட்ட குடிமனைகள் நாசமாகியுள்ளன. (யோ)

### இனப்பிரச்சினை

பென்றும் தெரிவித்துள்ளார்.

"நீண்ட நாட்களாக இறுதித் தீர்வொன்றைக் காண முடியாதிருக்கின்ற இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் விரைவில் தீர்வு ஏற்படும் என நம்புகிறேன்" எனவும் அவர் தெரிவித்தார்.

---

துப்பாக்கி சூடுகளும் கேட்டன மாலை 4 00 மணியளவில் சத்தங்கள் ஓய்ந்து விட்டன. மெதுவாக எழுந்து எட்டிப் பார்த்த போது இராணுவம் எவரையும் காணவில்லை மெதுவாக வீட்டை விட்டு வெளியேறி வந்து சேர்ந்தேன்.

என்னுடன்கூடவந்த நான்கு பேரைபற்றி தெரியவில்லை என்றார். (நி)

---

# வெளியாகி விட்டது

# விழுதுகள்

# தொகுப்பு - 1

களமாடி சரித்திரமாகிய களநாயகர்கள் பற்றி போராளிகளால் எழுதப்பட்டு, "ஈழமுரசு" "ஈழநாதம்" பத்திரிகைகளில் வெளியானவை.

அன்பளிப்பு - 50/-

கிடைக்குமிடம்:

1) தமிழ்த்தாய் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2) தமிழருவி ,, ,,
3) சுடர் ,, ,,
4) பூபாலசிங்கம் ,, ,, (3812)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
அதிபர்கள் நினைவுப் பேருரை வரிசையில்

**அமரர் சின்னப்பு சபாரட்ணம்**

(ஓய்வுபெற்ற அதிபர், யா. இ. க)

ஞாபகார்த்தமாக

**"நாட்டின் இன்றைய கல்வி முறையும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்"**

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி - யாழ். பல்கலைக்கழகம்

20-12-92 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு அமரர் சி சபாரட்ணம் அவர்களின் குடும்பத்தவரையும் மற்றும் அனைவரையும் அன்புடன் குமாரசாமி மண்டபத்திற்கு அழைக்கிறோம்.

ப. மா. ச.
யா. இ. க.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர் [சி-5613]

---

யாழ்ப்பாணம் வந்த பெண் ஒருவர் மூளாயைச் சேர்ந்த S. முருகையன் என்பவரிடம் சில பொருள்களை கொடுத்து விட்டு மறந்து சென்றுவிட்டார். அப்பொருள்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

### புகழுடல்

பி. ப. 2.00 மணி வரை வைக்கப்பட்டு, அச்சுவேலி பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் 3.00-4.00 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

### கிழக்கில்

டங்களில் கடந்த ஐந்து நாட்களாகப் பெய்துவந்த கடும் மழையினால் பெரும் வெள்ளம் ஏற்பட்டிருப்பதாகவும், உறுகாமம், உன்னிச்சை, நவகிரி ஆகிய குளங்களும் நிரம்பி உடைப்பெடுக்கும் அபாயக் கட்டத்தை அடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதே வேளை மட்டக்களப்பு நகருக்கு சமீபமாக இருக்கும் இருதயபுரம், தாண்டவன் வெளி போன்ற பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

### 8000 க்குமேற்பட்ட

பகுதிகளிலிருந்து வெளியேறினர்.

இவர்கள் அனைவரும் புத்தூர், ஆவரங்கால், வதிரி, நவிண்டில், உடுப்பிட்டி, கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இதேவேளை நேற்றுக்காலை தொண்டமானாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணை தாக்குதலினால் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இதற்கு மத்தியில் உலங்கு வானூர்தி ஒன்றுதொண்டமானாறு பகுதியை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டது. இவ்வேளை செல்வச்சந்நிதி ஆலயத்தில் வழிபாடு நடைபெற்றுக் கொண்டு இருந்தது. பக்தர்கள் சிதறி ஓடினார்கள்.

மாலை 3 மணியளவில் தொண்டமானாறு பகுதியில் கடற்படையினர் தொடர்ச்சியாக பத்துக்கும் மேற்பட்ட பீரங்கி தாக்குதலை நடத்தினர். இவற்றால் மக்கள் பாதுகாப்பு கருதி உடுப்பிட்டி நவிண்டில், வதிரி பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். (யோ)

---

## திருமதி செசிலியா அலெக்சாண்டர்

(இளைப்பாறிய ஆசிரியர்)

பத்தாவத்தை சம்பிலிப்புநேரியார் பங்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மயிலங்கூடல் இன்னாசிமுத்து அலெக்சாண்டர் [காலஞ்சென்ற], வசாவிளான், சின்னப்பு இராஜநாயகம் ஆகியோரின் அன்பு மனைவியும், திருமதி M J P. இராஜநாயகத்தின் அன்புத் தாயாரும், முப்பத்தைந்து வருடம் ஆசிரியர் சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்தவரும், காலஞ்சென்ற சவரிமுத்து பிலிப்புபிள்ளை இராஜநாயகம் என்பவரின் மாமியாரும் ஆகிய திருமதி அலெக்சாண்டர் செசிலியா அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கட்டுடை, பாலசிங்கம் இல்லத்தில் காலமாகி விட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிறு [20-12-92] மேற்படி இல்லத்திலும், ஆனைக்கோட்டை, அன்னம்மாள் ஆலயத்திலும் 10 மணியளவில் பூரண ஈமச்சடங்குகளுடன் நிறைவேற்றப்படும். இதனைக் கன்னாரும் குருக்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்று அன்னாரின் ஏகப்புதல்வி திருமதி M J P. இராஜநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் துயரில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திருமதி. M. J. P.இராஜநாயகம்

கட்டுடை,
மானிப்பாய்.

(3817)

---

## கண்ணீர் அஞ்சலி

## சீனித்தம்பி யோகநாதன்

(யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறையின் 4 ஆம் வருட மாணவன்)

(நாவற்குடா - மட்டுநகர்)

போராட்ட காலங்களில் வர்த்தகர் சங்கம் நடத்திய மருத்துவ பராமரிப்பு நிலையங்களில் இரவு - பகல் தன் நலம் கருதாது சேவையாற்றிய நாட்டுப்பற்றாளன்.

## யோகநாதனுக்கு

எமதுகண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம் இவரது பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தினருக்கும் சக நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கைத்தொழில் வர்த்தகர்சங்கம்
சாவகச்சேரி.

(3816)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 18.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7157

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-3429, 42-2397, 43-1119, 41-8292, 24-7078, 26-8051, 24-1040, 27-6583, 26-3178, 27-1939.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

28-1857 40-0919, 24-4267, 24-5437, 24-7350, 27-1706, 41-2666, 24-9489, 42-1320, 27-7756.